[பேராசிரியர் க. பொன்னுசாமி]

கல்லூரிக் கல்வி மண்டல துணை இயக்குநர் அவர்கள் இந்தக் கல்லூரியின் அன்றாடப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டு மென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஆணை (எண் 3985/ஏ1/94 நாள் 29—3—1994) வழங்கியிருக்கிறார். எனவே இதை ஏற்று ஆசிரியர்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டு பணிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படு கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திரு. இரா அப்பு நடேசன்: இருக்கையில் இல்லை.

ஆண்டிப்பட்டி தொகுதி வைகை அணை, ரா ஜஸ்ரீ சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர்கள் உயிரிழந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் கே. தவசி, எம். பெரியவீரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. தவசி.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, பெரியகுளம் வட்டம், வைகை அணை ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையில், 8-3-1994 அன்று ஏற்பட்ட விபத்தில் 6 பேர்கள் உயிர் இழந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

[திரு. ஏ. எம் பரமசிவன்] [1994 மார்ச் 30

அறிக்கை.

ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், வைகை அணை, மதுரை மாவட்டம், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிற்சாலை ஆகும், இங்கு கரும்பிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. 7-3-94 மற்றும் 8-3-94 அன்று இந்த தொழிற்சாலையில் சுத்திகரிப்பு செய்வதற்காக (cleaning operation) தொழிற்சாலை இயங்கவில்லை.

கரும்புச் சாற்றிலிருந்து தண்ணீரின் அளவைக் குறைப்பதற்கு சூடு படுத்தும் பொறி (Heaters) மற்றும் ஆவியாக்கும் பொறி (Evaporators) பயன்படுத்தப்படுகிறது. ஆவியாக்கும் பொறி என்பது குழாய்கள் பொருத்தப்பட்ட ஒரு கலன் ஆகும். இக் குழாய்களின் வாயிலாகக் கரும்புச் சாறு செலுத்தப்பட்டு அக் குழாய்களின் வெளிப்புறமாக நீராவி மூலம் சூடுபடுத்தப்படுகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறை இக் குழாய்களில் உள்ள படிவங்கள் (Scales) அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்படவேண்டும்.

8-3-94 அன்று மேற்கண்டவாறு சுத்தம் செய்யும் பொழுது 9 தொழிலாளர்கள் சுமார் 50 செ.மீ. விட்டமுள்ள திறப்பு (Manhole) வாயிலாக, ஆவியாக்கும் பொறியின் உள்ளே நுழைந்து குழாய்களை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அதற்கு முன்பாக, தேவையான நீராவி வெளியில் செல்லும், உள்ளே வரும் மற்றும் ஆவி (Vapour) வெளிச் செல்லும் வழிகளை அடைப்பது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

8-3-94 அன்று சுமார் 4 மணியளவில் டர்பைன் சோதனை செய்வதற்காக நீராவி உற்பத்தி செய்யப்பட்டு டர்பைன் உள் செலுத்தப்பட்டது. வழக்கம்போல் வெளிச்சென்ற நீராவி டர்பைனிலிருந்து படிவுத் தட்டில் (pan) செலுத்தப்பட்டது. இந்தப் படிவுத் தட்டுகளில் கரும்புச்சாறு, நீராவி மற்றும் ஆவியாக்கும் பொறியில் உள்ள ஆவி மூலம் சூடுபடுத்தப்படும் போது, சர்க்கரைப் படிவங்கள் உருவாகும்.

இந்த ஆவி (Vapour) குழாய்களில், ஒரு கேட் வால்வ் பொருத்தப்பட்டு உள்ளது. எனினும், இந்த வால்வ் முழுமையாக மூடப்படவில்லை. ஆகவே, நீராவி, ஆவியாக்கும் பொறியினுள், படிவுத் தட்டிலிருந்து பின்னோக்கி நுழைந்து விட்டது.

1994 மார்ச் 30]   [திரு. ஏ. எம். பரமசிவன்]

மூன்று வேலையாட்கள், திறப்பு (Manhole) மூலம், ஆவியாக்கும் பொறியிலிருந்து வெளியில் வந்துவிட்டனர். 4-வது மற்றும் 5-வது ஆட்கள் வெளியில் ஒரே சமயத்தில் வர முயற்சி செய்ததால் வழியில் அடைப்பு ஏற்பட்டு விட்டது. எல்லா வேலையாட்களும் வெளியில் வரும்போது அவர்களது உடம்புகளில் காயங்கள் ஏற்பட்டன.

இதன் விளைவாகக் கீழ்க்கண்ட ஆறு வேலையாட்கள் இறந்து விட்டனர்:—

1. ஆர். செல்ல பாண்டியன், த/பெ. வி. ராமன், பயிற்சி பெறுபவர்.

2. கே. செல்வம், த/பெ. டி. காளிராஜ் நாயுடு, தற்காலிக ஊழியர்.

3. ஜி. கோவிந்தராஜ், த/பெ. குருசாமி, தற்காலிக ஊழியர்.

4. கே. ராஜேஸ்வரன், த/பெ. கருப்பையா, தற்காலிக ஊழியர்.

5. ஜி. முருகன், த/பெ. குருசாமி, தற்காலிக ஊழியர்.

6. ஏ. செல்வம், த/பெ. அழகப்பன், தற்காலிக ஊழியர்.

கீழ்க்கண்ட மூன்று தொழிலாளர்களுக்கு லேசான காயங்கள் ஏற்பட்டன :—

1. என். கோபாலகிருஷ்ணன், த/பெ. நாராயணசாமி, பயிற்சி பெறுபவர்.

2. கே. கோனையன், த/பெ. காளிராஜ் நாயுடு, பயிற்சி பெறுபவர்.

3. ஜி. முத்துராஜ், த/பெ. கோபாலகிருஷ்ணன், தற்காலிக ஊழியர்.

இந்த விபத்து குறித்து விசாரணை செய்து காணப்பட்ட முரண்பாடுகளுக்கு தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950-ன் கீழ் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையும், தொழிலாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ், மதுரை தொழிலாளர் துணை ஆணையரும் மேற்படி நிர்வாகத்தினருக்கு உடனடியாக காரணம் கேட்டும் குறிப்பாணை அனுப்பியுள்ளனர்.

கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈடு விவரங்கள் :—

வரிசை எண்	பெயர்	வயது	சம்பளம்	நஷ்ட ஈட்டுத் தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	ஆர். செல்லப்பாண்டியன்	27	மாதம் ரூ. 900 வீதம்.	ரூ. 76,885
2.	கே. செல்வம் ..	35	ரூ. 28 நாள் ஒன்றுக்கு.	ரூ. 66,212
3.	ஜி.கோவிந்தராஜ் ..	26	ரூ. 22 நாள் ஒன்றுக்கு.	ரூ. 56,834
4.	கே. ராஜேஸ்வரன் ..	30	ரூ. 22 நாள் ஒன்றுக்கு.	ரூ. 54,907
5.	ஜி. முருகன் ..	22	ரூ. 22 நாள் ஒன்றுக்கு.	ரூ. 58,442
6.	ஏ. செல்வம் ..	29	ரூ. 29 நாள் ஒன்றுக்கு.	ரூ. 73,052
			மொத்தம் ரூ.	3,86,332

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழிலாளர்களுக்கு, நஷ்ட ஈட்டுச் சட்டத்தின்கீழ், மதுரை துணைத் தொழிலாளர் ஆணையர், நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூ. 3,86,332-ஐ செலுத்து தொகையாக டெபாசிட் செய்யுமாறு மேற்கண்ட தொழிற்சாலையின் நிருவாகத்தினரை 17—3—1994 அன்று அறிவுறுத்தியதின் பேரில், நிர்வாகம் ரூ. 3,86,332ஐ அவரிடம் செலுத்தி உள்ளது. இது தவிர இறந்தவர் ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் உதவித்தொகையாக ரூ. 30,000 வீதம் வழங்க ரூ. 1,80,000-ஐயும் நிர்வாகம் டெபாசிட் செய்துள்ளது.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விபத்தில் பலியானவர்கள் நிரந்தரப் பணியாளர்களா? அல்லது, தினக்கூலி அடிப்படையில் வருபவர்களா ? நஷ்ட ஈடு வழங்கப் பட்டதா? யாருடைய கவனக் குறைவினால், அந்த விபத்து ஏற்பட்டது என்பதை விளக்கும் படி, மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் 8-3-1994-ஆம் நாளன்று, சுத்திகரிப்புப் பணி மேற்கொண்ட போது, தொழிலாளர்கள் ஆவியாகும் பொறியினுள்ளே நுழைந்து, குழாய்களைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடு பட்டிருந்தனர். அதுசமயம், ஆவி செல்லும் குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள கேட் வால்வுகள் முழுமையாக மூடப் படவில்லை. ஆகவே, நீராவி, ஆவியாக்கும் பொறியினுள் உள் நோக்கி நுழைந்து இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து, கவனக் குறைவினால் ஏற்பட்டது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். இந்த விபத்தில் இறந்தவர்களுக்கு நஷ்டஈடு, ஈட்டுச் சட்டத்தின் கீழ், கிடைக்க வேண்டிய மொத்த நஷ்ட ஈட்டுத் தொகையான ரூ. 3,86,332-ஐயும், மேலும் உதவித் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 30,000 வீதமும் வழங்கும் பொருட்டு, மொத்தத் தொகையினை, நிர்வாகம், மதுரை, தொழிலாளர் துணை ஆணையரிடம் 'டெபாசிட்' செய்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11-55

*திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3—3—1994 ஆம் தேதியன்று நடந்த விபத்தில் 6 பேர்கள் உயிரிழந்துள்ளார்கள். அவர்கள் நல்ல இளைஞர்கள். அவர்கள் வாழவேண்டிய வயதிலே இவ்வளவு சீக்கிரமாக உயிர் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுடைய குடும்பங்களுக்கு இன்றையதினம் ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது ஈடுகட்ட முடியாத ஒன்றாகும். அவர்களுடைய குடும்பத்தினர்கள் தங்களுடைய வாழ்க்கையை வழிநடத்து வதற்குப் பல இன்னல்களை ஏற்க வேண்டிய சூழ்நிலையில் இருக் கிறார்கள். ஆகையால் கொடுக்கப்பட்டிருக்கும் உதவித் தொகையை இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொடுத்து, அவர்களுடைய குடும்பங்களை வாழவைப்பதற்கு ஏதேனும் அமைச்சர் அவர்கள் மூலமாக வழிவகை செய்யப்படுமா? என்பதை அறிய விரும்புகின்றேன்.

[1994 மார்ச் 30

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில் கொடுக்க வேண்டிய ஈட்டு உதவித் தொகை அவர்களுடைய சம்பளத்தின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் முழுமையான தொகையும் மதுரை தொழிலாளர் துணை ஆணையாளர் அவர்களிடத்திலே இருக்கிறது. உண்மையான வாரிசுதாரர்கள் தெரிந்தபிறகு அத்தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1994-95, அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-95 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை அளித்தல், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்:

A. வருவாய்க் கணக்கில் செலவு:

கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்]
1 நிலவரித் துறை	3,35,70
2 மாநில ஆயத் தீர்வைத் துறை	2,71,25
3 மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்	4,55,19
4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்	18,23,26
5 முத்திரைத் தாள்கள்—நிருவாகம் ..	1,13,77
6 பத்திரப் பதிவு	7,70,90
7 மாநிலச் சட்டமன்றம்	1,50,34
8 தேர்தல்கள்	1,08,16
9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	22,57,53

TRUTH ALONE TRIUMPHS